பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 03 2024 **FRIDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தேர்தல் அறிவிப்புக்கு பின்னர், **c-vigil** செயலியில் 79 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விதிமீறல் புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

2. அரசு மின் விற்பனை தளம் **'**ஜெம்**',** 4 லட்சம் கோடி ரூபாய் மொத்த விற்பனை மதிப்புடன் நடப்பு நிதியாண்டை நிறைவு செய்துள்ளது.

3. நாடுமுழுவதும் மக்களவைத் தேர்தலுக்கான அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

4. காஸாவுக்கு நிவாரண உதவிகள் கிடைக்கும் வகையில் இஸ்ரேல் செயல்பட வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

5. ஸ்பெயின் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதி சுற்றுக்கு இந்தியாவின் சிக்கி ரெட்டி – சுமித் ரெட்டி இணை முன்னேறியுள்ளது.

**<<<<>>>>**

மக்களவைத் தேர்தல் அறிவிப்புக்கு பின்னர், **c-vigil** செயலியில் 79 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விதிமீறல் புகார்கள் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அப்புகார்களில் 99 சதவீத புகார்களுக்கு தீர்வு கண்டிருப்பதாகவும், அவற்றில் 89 சதவீதத்திற்கும் மேற்பட்ட புகார்கள் அவை பதிவான 100 நிமிடங்களுக்குள் தீர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக வைக்கப்பட்ட விளம்பர பலகைகள் மற்றும் பதாகைகள் தொடர்பாக 58 ஆயிரத்து 500க்கு மேற்பட்ட புகார்கள் இந்த செயலியில் பதிவாகியுள்ளன.

சுமார் ஆயிரத்து 400 புகார்கள் பணம், பரிசுப் பொருட்கள் தொடர்புடையதாகவும், 3 சதவீத புகார்கள் சொத்து சேதம் தொடர்புடையதாகவும் இருந்ததாக தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்ட நேரத்தை தாண்டி பிரச்சாரம் செய்தது, ஒலிபெருக்கிகளை பயன்படுத்தியது தொடர்பாக சுமார் ஆயிரம் புகார்கள் பதவானதாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>**

அரசு மின்விற்பனை தளம் ஜெம், 4 லட்சம் கோடி ரூபாய் மொத்த விற்பனை மதிப்புடன் நடப்பு நிதியாண்டை நிறைவு செய்துள்ளது.

இது, கடந்த நிதியாண்டைக் காட்டிலும், இரண்டு மடங்கு அதிகமாகும்.

இதுதொடர்பாக, புதுதில்லியில் இன்று செய்தியாளர்களை சந்தித்த அரசு மின்சந்தை தலைமை நிர்வாக அலுவலர் திரு. **P.K. Singh,** பொது கொள்முதலில் வெளிப்படைத்தன்மையை செயல்படுத்தும் அரசு மின்சந்தையின் தனித்துவமான டிஜிட்டல் திறனுக்கு ஒரு சான்றாக நடப்பாண்டின் மொத்த விற்பனை மதிப்பு அமைந்துள்ளதாக தெரிவித்தார்.

**<<<<>>>>**

கோதுமை கையிருப்பு விவரங்களை கட்டாயம் அறிவிக்க வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய உணவு மற்றும் பொதுவிநியோக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் உள்ள மொத்த விற்பனையாளர்கள், சில்லரை விற்பனையாளர்கள் அனைவரும் வரும் ஏப்ரல் 1ஆம் தேதி முதல், அடுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும் வரையிலான காலம் வரை கோதுமை கையிருப்பை தெரிவிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ஒட்டு மொத்த உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், பதுக்கலை தடுக்கவும் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>**

ஜம்மு காஷ்மீரின் **Ramban** மாவட்டத்தில் நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர், பிரதமர், ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இன்று காலை ஜம்மு - ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் பயணிகளுடன் சென்ற நான்கு சக்கர வாகனம் நிலை தடுமாறி கவிழ்ந்ததில் 10 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து தொடர்பாக , குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தனது இரங்கலை தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆறுதலை தெரிவிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும், விபத்தில் காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், இந்த விபத்துச் செய்தி தமக்கு அதிர்ச்சியை தந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய உதவிகளை செய்ய வேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்திற்கு அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவாக குணமடைய வேண்டும் என்று தாம் பிரார்த்திப்பதாக தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

ராமகிருஷ்ணா மடத்தைச் சேர்ந்த சுவாமி **Smaranananda** மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நவீன கல்விமுறை. திறன் மேம்பாடு மற்றும் மகளிர் அதிகாரம் பெறுதல் தொடர்பான செயல்பாடுகளில் அவர் ஈடுபட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

**<<<<>>>>**

நாடுமுழுவதும் மக்களவைத் தேர்தலுக்கான அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது

பெண்களை மையப்படுத்தி மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நமோ செயலி வாயிலாக தமிழக பிஜேபி தொண்டர்களுடன் 'எனது பூத் – வலிமையான பூத்' என்ற நிகழ்ச்சியில் கலந்துரையாடிய அவர், தமிழ் மொழியின் பெருமையை பறைசாற்றும் விதத்தில் காசியில் தமிழ் சங்கமம் நிகழ்ச்சி நடைபெற்றதாக கூறினார்.

தொண்டர்களின் கடின உழைப்பால் தமிழ்நாட்டில் பிஜேபி வளர்ந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மக்களுக்கு பிரச்சினையை ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாட்டில் திமுக செயல்படுவதாக திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

இதற்கிடையே. காங்கிரஸ் கட்சிக்கு தொல்லை தரும் வகையில் வருமான வரித்துறையை ஒரு ஆயுதமாக பிஜேபி பயன்படுத்துகிறது என்று காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

காங்கிரஸ் கட்சி ஆயிரத்து 823 கோடி ரூபாய் செலுத்த வேண்டும் என்று வருமான வரித்துறை நேற்று நோட்டீஸ் அனுப்பிய நிலையில், அவர் இக்கருத்தினை தெரிவித்துள்ளார்.

பீகார் மாநிலத்தில் முதல்கட்ட தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை நாளை நடைபெறவுள்ளது.

அம்மாநிலத்தில் வேட்புமனுக்களை திரும்பப் பெற ஏப்ரல் 2ஆம் தேதி கடைசி நாளாகும்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிப்பதற்கு நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

ராமநாதபுரத்தைச் சேர்ந்த மாணவிகள் முதல்முறை வாக்களிக்கவிருப்பது தங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருவதாக தெரிவித்தனர்.

<<<<>>>>

பீகார் மாநிலத்தில். எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கு இடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

மொத்தம் உள்ள 40 தொகுதிகளில், திரு. லாலு பிரசாத் தலைமையிலான ராஜ்ட்ரிய ஜனதா தளம் 26 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

காங்கிரஸ் 9 தொகுதிகளிலும், இடதுசாரி கட்சிகளான சிபிஐ எம்எல் 3 தொகுதிகளிலும், இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலா ஒரு தொகுதியிலும் போட்டியிடுகின்றன.

இதுதொடர்பாக பாட்னாவில் இன்று நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசிய மகா கூட்டணியைச் சேர்ந்த தலைவர்கள், 2019ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் போட்டியிட்ட அதே தொகுதிகளில் ராஷ்ட்ரிய ஜனதா தளம், காங்கிரஸ் கட்சி போட்டியிடுவதாக தெரிவித்தனர்.

<<<<>>>>

காஸாவுக்கு நிவாரண உதவிகள் கிடைக்கும் வகையில் இஸ்ரேல் செயல்பட வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உலகளாவிய உணவு பாதுகாப்பு அமைப்பு இன்னும் சில நாட்களில் காஸாவில் பஞ்சம் ஏற்படலாம் என்று எச்சரிக்கை ஏற்படலாம் என்று சர்வதேச நீதிமன்றம் இந்த முடிவை அறிவித்துள்ளது.

இதற்கிடையே, காஸாவுக்கு நலத்திட்ட உதவிகள் கிடைக்கவிடாமல் இஸ்ரேல் தடுப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தரை, கடல் மற்றும் வான்வழியாக காஸாவுக்கு உதவிகள் அனுப்பப்படுவதை இஸ்ரேல் அனுமதித்து வருவதாக கூறியுள்ளது.

இந்நிலையில், காஸாவின் தற்போதைய நிலைமைக்கும், இந்த போரின் தொடக்கத்திற்கு ஹமாஸ் அமைப்பே காரணம் என்று இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ளது.

**<<<<>>>>**

ரஷ்யா – யுக்ரைன் மோதல் குறித்து, யுக்ரைன் வெளியுறவு அமைச்சர் திரு. **Dmytro Kuleba-**வுடன் விவாதித்ததாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று திரு. **Dmytro Kuleba** மற்றும் திரு. ஜெய்சங்கர் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதுதொடர்பாக திரு. ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப்பதிவில், உலகளாவிய மற்றும் மண்டல அளவிலான பிரச்சினைகள் குறித்து இருவரும் பேசியதாக குறிப்பிட்டுள்ளார்.

யுக்ரைன் வெளியுறவு அமைச்சரின் வருகை, அந்நாட்டின் தற்போதைய நிலைமையை அறிவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தந்ததாக தெரிவித்துள்ளார்.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் இந்தியாவின் உறுதிப்பாட்டை அந்த சந்திப்பின் போது தாம் வலியுறுத்தியதாகவும் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

**<<<<>>>>**

பங்களாதேஷில் காற்று மாசுபாடு மற்றும் சுகாதார சீர்கேடு அபாய அளவை எட்டியிருப்பதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்த வங்கி வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், பங்களாதேஷில் காற்று மற்றும் நீர் மாசுபாடு, சுகாதார சீர்கேடு காரணமாக ஆண்டுக்கு 2 லட்சத்து 72 ஆயிரம் பேர் அகால மரணம் அடைவதாக கூறப்பட்டுள்ளது.

காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்துவது, நீரின் தரத்தை உயர்த்துவது மற்றும் சுகாதார முன்னேற்ற நடவடிக்கைகள் மூலமாக ஆண்டுக்கு ஒரு லட்சத்து 33 ஆயிரம் அகால மரணங்களை தடுக்க முடியும் என்றும் அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஸ்பெயின் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதி சுற்றுக்கு இந்தியாவின் சிக்கி ரெட்டி – சுமித் ரெட்டி இணை முன்னேறியுள்ளது.

மேட்ரிட்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 14-21, 21-11, 21-17 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் **Rehan Naufal - Lisa Ayu** இணையை வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் தனிஷா கிறாஸ்டோ – அஸ்வினி பொன்னப்பா இணை, தைவான் இணையிடம் தோல்வியடைந்தது.

<<<<>>>>

ஜப்பான் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – ருத்துஜா போஸ்லே இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

<<<<>>>>

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற கொல்கத்தா அணி முதல் பந்துவீச தீர்மானத்துள்ளது.

<<<<**END**>>>>